திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி :11 | நவம்பர் - 08 | விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு




ஆசிரியர் மற்றும் அலுவலகப் பெருமக்களோடு தலைவர் மற்றும் செயலாளர்கள்

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 102
பகுதி : 11
நவம்பர் 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2039



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,**
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| இதழ்மணம் | 3 |
| நூற்றாண்டு விழாப் பேரணி | 4 |
| நூற்றாண்டு விழா – முதல் அமர்வு | 6 |
| முதல்நாள் இரண்டாம் அமர்வு | 9 |
| இரண்டாம் நாள் முதல் அமர்வு | 10 |
| தமிழ்ச் சங்கச் சான்றோர் விருது விழா | 12 |
| நூல்கள் வெளியீடு | 13 |
| நிறைவு விழா சிறப்புரைகள் | 14 |
| மதுரை நான்காம் தமிழ்ச் சங்க நூற்றாண்டு விழா அழைப்பிதழ் | 15 |
| முதல் அமர்வு | 17 |
| தமிழ்ச் சான்றோர் விழா | 20 |

# இதழ்மணம்

பேரன்பு தமிழ் உள்ளங்களுக்கு

வணக்கம், நூற்றாண்டைக் கடந்து தமிழ்ப்பணியாற்றி வரும் மதுரைத் தமிழ்ச்சங்கம் 2008, செப்டம்பர் 20, மற்றும் 21ஆம் நாட்களில் இனிமையான நூற்றாண்டு விழாவைச் மிகச் சிறப்புடன் கொண்டாடி மகிழ்ந்தது; தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது. மதுரைத்தமிழ்ச்சங்க நூற்றாண்டு விழா நிகழ்வுகள் அனைத்தையும் செந்தமிழ் இதழ் வாசகர்களின் பார்வைக்கும் கருத்துக்கும் கொணரவேண்டும் என்றநோக்கில் 2008 நவம்பர் இதழ் நூற்றாண்டு விழா சிறப்பிதழாகத் தங்களின் கைகளில் தவழ்வதற்குப் பெருமையும் பேருவகையும் கொள்கின்றோம்.

மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி!

– ஆசிரியர் –




தமிழ்ச் சங்கத் தலைவர், தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் தமிழ்ச் சங்கச் செயலர் மற்றும் கல்லூரிச் செயலர் ஆகியோர் கௌரவிக்கப்படுகிறார்கள்.

# நூற்றாண்டு விழாப் பேரணி

மனதிற்கு மகிழ்வு தரும் அனைத்து நிகழ்வுகளும் இறைவணக்கத்துடன் நடைபெறுவது நம் இந்திய, தமிழ் மரபு. தமிழ் மரபைத் தொடர்ந்து பின்பற்றி வரும் மதுரைத்தமிழ்ச்சங்கமும் இறைவணக்கத்துடன், இறைவனுக்கு நன்றியாற்றும் முறையில் மதுரைத்தமிழ்ச் சங்கத்தின் தனிப்பெரும் இறைவனான வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்களை வழிபாடு செய்து, தன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வண்ணம் முதல் அடியை எடுத்து வைத்தது.

20.09.2008 அன்று இனிய காலைப் பொழுது 8 மணி அளவில் மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர் முகவை மன்னர் குமரன் சேதுபதி அவர்கள், துணைத்தலைவர் முகவை இராணி லட்சுமி நாச்சியார் ஆகியோர் தலைமையிலும், மதுரைத்தமிழ்ச்சங்ச் செயலர் இரா.அழகுமலை எம்.ஏ., எம்.பில்., மற்றும் செந்தமிழ்க்கல்லூரிச் செயலர் இரா.குருசாமி பி.ஏ., அவர்கள் முன்னிலையிலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் இருந்து புறப்பட்டது.

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி கல்விக்குழு உறுப்பினர்கள், செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் முனைவர் க.சின்னப்பா அவர்கள், செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்கள், அலுவலர்கள், சங்க அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து பேரணி தொடங்கப் பெற்றது. தமிழ்ச்சங்க நிறுவனர் தமிழ் வள்ளல் பொன். பாண்டித்துரை அவர்களின் திருவுருவச் சிலைக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர், துணைத்தலைவர் அவர்களும், மதுரை தமிழ்ச்சங்கச் செயலர் அவர்களும், செந்தமிழ்க்கல்லூரிச் செயலர் அவர்களும், செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் அவர்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். கலந்து கொண்ட அனைவரும் வள்ளல்.பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்கு வணக்கத்தைச் செலுத்தினர்.

தமிழர்களின் பாரம்பரியமிக்க இசையுடனும் கலையுடனும் விழாப் பேரணிப் தொடங்கியது. சிலம்பாட்டம், கரகாட்டம், பறையொலி முன்செல்ல மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகிகளும், செந்தமிழ்க்கல்லூரி பேராசிரியப் பெருமக்களும் இணைந்து செல்ல செந்தமிழ்க் கல்லூரி மாணவ, மாணவியர் பின்தொடர்ந்து செல்ல விழாப் பேரணி மிகச் சிறப்புடன் தொடங்கியது. ஒவ்வொரு வகுப்பு மாணவியரும் தங்களை வேறுபடுத்திச் சிறப்பித்துக் காணும் வகையில் சீருடைகளிலும் மாணவர்கள் அனைவரும் வெண்ணிறவேட்டி சட்டையிலும் கலந்து கொண்டது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

தமிழ்ச்சங்கச் சாலையில் தொடங்கிய பேரணி சிம்மக்கல், நெல்பேட்டை, முனிச்சாலை வழியாக காமராசர் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு தொழில் வர்த்தகப் பேரரங்கிற்கு 10 மணியளவில் வந்தடைந்தது. பேரணி நிகழ்வில் கல்லூரிப்பேராசிரியர்கள் ஒழுங்கமைக்க, மக்கள் நண்பர்களாம் காவல்துறை அதிகாரிகள் பாதுகாப்பு நல்க தமிழ் முழக்கங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் அன்பர்கள் அனைவரின் ஆதரவோடும் பங்கேற்போடும் நூற்றாண்டு விழாப்பேரணி இனிதே நிகழ்வுற்றது.



மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சியோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து நூற்றாண்டு விழா நிகழ்விடத்திற்கு ஊர்வலம் தொடங்குகிறது.

# நூற்றாண்டு விழா – முதல் அமர்வு

தமிழ்ப்பேரணி ஒளிர் காலைப் பொழுது 10 மணியளவில் தமிழ்நாடு தொழில் வர்த்தகப் பேரவை அரங்கினை வந்தடைந்த போது, அங்குத் திரளாகக் கூடியிருந்த தமிழ் ஆர்வலர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்று உளம் களித்தனர். நிறைவான மனவுணர்வு அரங்கெங்கும் அழகு செய்ய நூற்றாண்டு விழா தொடக்கம் கண்டது. தொடங்குகின்றசெயல் ஒவ்வொன்றும் சிறப்புடன் நிறைவு பெறதுணை புரியும் விநாயகரைப் பாடிப் பரவும் முகத்தால், திருவாவடுதுறைஆதீனம் சிவத்திரு. யாழ்சுந்தரம் அவர்கள் 'கணபதி என்றிட கலங்கும் வல்வினை' என்று பாட, அதனைத் தொடர்ந்து மாணவ–மாணவியர் தமிழ்த்தாய் வாழ்த்தினைச் சேர்ந்திசைத்தனர்.

தமிழ் நெஞ்சங்களை மலரச் செய்த நூற்றாண்டு விழாவினை ஒளிரச் செய்யும் முகமாய் மாட்சிமை தங்கிய மகாராணியார் சமூகத்தைச் சேர்ந்த சிவகங்கை இராணியார் மதுராந்தகி நாச்சியார், முகவை இராணியார் இலக்குமி நாச்சியார், முன்னாள் உச்சநீதிமன்றநீதிபதி, இந்திய சட்ட ஆணையத் தலைவர் டாக்டர் ஏ.ஆர்.இலட்சுமணன், முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆகியோர் திருவிளக்கேற்றி வைத்து மங்களம் பொலியச் செய்தனர்.

நூற்றாண்டு விழாவிற்கு வருகை புரிந்துள்ள தமிழ் அன்பர்கள் அனைவரையும் வரவேற்கும் வண்ணமாக, செந்தமிழ்க்கல்லூரித் தலைவர் சேதுராமன் அவர்கள், 'முடிதரித்த மூவேந்தர் மடி தவழ்ந்த தமிழே' என்று தமிழுணர்வுடன் தமிழன்னையை வணங்கி, அனைவரையும் வரவேற்றார்.

தொடக்க விழாவைத் தலைமையேற்றுச் சிறப்பித்த மாட்சிமை தங்கிய முகவை மன்னர் ந.குமரன்சேதுபதி அவர்கள், விழாநாளைத் திருநாள் என்றழைத்து உளங்கனிந்தார். மதுரைத்தமிழ்ச்சங்கம் மற்றும் செந்தமிழ்க்கல்லூரியைச் சார்ந்த அனைவரின் ஒத்துழைப்போடு, நூற்றாண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்று வருவதைக் குறிப்பிட்டுத் தலைமையுரையாற்றினார்.

நூற்றாண்டு விழாவை இந்திய சட்ட ஆணையத் தலைவர் முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி டாக்டர் ஏ.ஆர்.இலட்சுமணன் அவர்கள் தொடங்கி வைத்தார். தமிழின்பாலுள்ள அன்பாலும், செட்டிநாடும் தமிழும் என்ற உணர்வோடும் கலந்து கொள்வதாகக் குறிப்பிட்ட நீதிபதி அவர்கள், 100 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்த பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்களின் நோக்கங்களான தமிழ்க்கல்லூரி தொடங்குவது, ஓலைச்சுவடி பராமரிப்பு, பழைய நூல்களைத் தேடி பதிப்பித்தல் முதலானவற்றைநிறைவேற்றியுள்ளதைச் சுட்டிக்காட்டி தொடக்க உரை வழங்கினார்.

சிறப்புரை நல்கிய தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், தம் உரையில் அமெரிக்க மண்ணில் சுவாமி விவேகானந்தர் ஆன்மிக எழுச்சி உரையாற்றுவதற்கு முகவை மன்னர் பாஸ்கர சேதுபதியவர்கள் ஆற்றிய பெருந்தொண்டினையும், தமிழக மண்ணில் விவேகானந்தர் பாதம் தரையில் படாது, தன் கையில் படட்டும் என்று பெருமைமிகு எண்ணங்களோடு தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றிய சேவை குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் தமிழில் திருக்குறளைத் தவறாகப் பதிப்பித்த ஸ்காட் பாதிரியாரின் நூல்பிரதிகள் அனைத்தையும் மொத்த விலை கொடுத்து வாங்கி, தீயிட்டுக் கொளுத்தியதன் உட்பொருளையும் சுட்டிக்காட்டினார்.

இவரைத் தொடர்ந்து உரையாற்றிய சிவத்திரு காமாட்சிபுரம் ஆதினம் அவர்கள் மதுரைத்தமிழ்ச்சங்க நூற்றாண்டு விழா மதுரை மாநகரில் மிகப் பொலிவுடன் நடைபெறுவதை மகிழ்ச்சியோடு எடுத்துரைத்தார்.

தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் மேனாள் துணை வேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றும் போது, சென்றநூற்றாண்டு தமிழ்மொழிக்கு வாய்த்த ஓர் அரிய நூற்றாண்டு என்று குறிப்பிட்டார். தமிழுக்கு வளம் சேர்க்க தொடங்கப் பெற்றது மதுரைத்தமிழ்ச்சங்கம் என்றும் அந்நிகழ்விற்கு அடித்தளமிட்ட சேதுகாவலர்களான பாஸ்கர சேதுபதியும், பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்களும் தமிழ் காவலராகத் தமிழைக் காத்தனர்....! என்று பெருமைப்பட உரைத்தார்.

வாழ்த்துரை நல்கிய மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ஐ.சிங்காரம் அவர்கள், பெயருக்கு முன்னால் வள்ளல் என்றபட்டம் பெற்றஒரே தமிழ் அறிஞர் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்கள் என்று குறிப்பிட்டார். மேலும் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் ஒரு மாபெரும் பேச்சாளர்; சிறந்த சிந்தனையாளர்; சிறந்த ஆராய்ச்சியாளர்; சிறந்த பதிப்பாசிரியர் மட்டுமல்ல அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரே மாமனிதர் என்றும் குறிப்பிட்டது நூற்றாண்டு விழா நிகழ்வில் மகுடம் சூட்டியது போல் அமைந்தது.

தமிழ் மொழிக்குச் சோமசுந்தர விலாசமும் ராமலிங்க விலாசமும் ஆற்றிய சிறப்பினை தஞ்சை மாமன்னர் போன்ஸ்லே அவர்கள் குறிப்பிட்டார். மேனாள் தமிழக அமைச்சர் அய்யாறு வாண்டையார் அவர்கள் சேதுபதிகள் ஆற்றிய தமிழ்த் தொண்டைப் பாராட்டிப் பேசினார்.

ஆட்சிக்குழு உறுப்பினர் வழக்குரைஞர் க.முத்தையா பசும்பொன் அவர்கள் முத்திரை பதிக்கும் விழாவாக நூற்றாண்டு விழா தொடங்கியிருப்பதைச் சுட்டிக்காட்டி, பங்கேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார்.

தொடக்க விழாவில் கலந்து கொண்ட தமிழ் உணர்வுமிக்க அனைவரும் நெஞ்சம் நிறைந்த இன்பவுணர்வை எய்தினர்.

---



பெரும்புலவர் திரு.இரா.இளங்குமரனார் அவர்களுக்கு முகவை மன்னர் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்குகிறார். அருகில் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் அவர்கள்.

# முதல்நாள் இரண்டாம் அமர்வு

துவக்கம் இனிமையாக நடந்தேற, தொடர்ச்சி அனைத்தும் குன்றாப் பொலிவுடன் நிகழும் என்றநம்பிக்கையானது மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு விழாவை எதிர்நோக்கியிருந்த அனைவரின் நெஞ்சத்திலும் நிலைத்த இன்பத்தை நல்குவதாயிற்று.

நண்பகல் விருந்திற்குப்பின் தொடங்கப் பெற்றஇரண்டாம் அமர்விற்கு வந்திருந்த தமிழ்ச்சான்றோர்கள், தமிழ் அன்பர்கள், தமிழ் மாணவர்கள் அனைவரையும் முகவை ராணியார் இலக்குமி நாச்சியார் தமிழ்மரபுடன் வரவேற்றார்.

தலைமையேற்றுச் சிறப்புச் செய்த முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி அவர்கள், அந்நியர் ஆட்சியில் தமிழ் குன்றிவிடாமல், தமிழ்மொழியை ஒளிரச் செய்ய வேண்டும் என்றநோக்கில், தமிழ்வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்ததை நினைவு கூர்ந்து தலைமையுரை ஆற்றினார்.

மன்னரைத் தொடர்ந்து, நிகழ்வை முன்னிலையேற்று நடத்தும் சிறப்பினை ஏற்றகல்லூரிச் செயலர் இரா.குருசாமி பி.ஏ., அவர்கள் தமிழ்ச்சங்கம் மற்றும் செந்தமிழ்க் கல்லூரி ஆகிய இரு கல்வி நிறுவனங்களும் எதிர்கொண்ட இன்னல்கள் அனைத்தையும் துகள்துகளாக்கிச் சீரோடும் சிறப்போடும் செயலாற்றிவரும் பாங்கினைப் பெருமிதத்துடன் எடுத்துரைத்தார்.

பாண்டித்துரைத் தேவரும் செந்தமிழ்ப் பணியும் என்றபொருளில் முனைவர் அ.மணவாளன், முனைவர் க.பசும்பொன், முனைவர் இரா.மோகன், முனைவர் கு.ஞானசம்பந்தன், க.க.இராசா, வழக்கறிஞர் நல்லையம்பெருமாள் ஆகியோர் தங்கள் சிறப்புரையை நல்கி, செவிக்குணவு அளித்தனர்.

செறிவுமிக்க கருத்துரைகளுக்குப் பின்னர் ஆட்சிக்குழு உறுப்பினர், ச.பரங்குன்றம் அவர்கள் நன்றிமலர்களை அனைவருக்கும் ஒளிர்ந்தார்.

# இரண்டாம் நாள் முதல் அமர்வு

தமிழ்ச் சான்றோர் விழா பீடுநடை போட்டு பொலிவுடன் நிகழ்ந்த முதல்நாள் நிகழ்வினைத் தொடர்ந்து இரண்டாம் நாள் (21.09.08) முதல் அமர்வு தமிழ்ச்சான்றோர் விழாவாக வருகை புரிந்த தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் மிக்க விருப்புடன் இரண்டாம் நாள் நிகழ்விற்கு வந்திருந்து, விழா அரங்கை அழகுபடுத்தினர்.

திட்டமிட்ட படியே மிகச் சரியாக முற்பகல் 10 மணிக்குத் தமிழ்ச் சான்றோர் விழா தொடங்கப் பெற்றது. மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்கள் தலைமையேற்க, மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலர் இரா.அழகுமலை அவர்களும் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் இரா.குருசாமி அவர்களும் முன்னிலை வகித்துப் பெருமையளித்தனர்.

ஆட்சிக்குழு உறுப்பினர் திருமிகு. இரா.கண்ணன் அவர்கள் தமிழ் விருந்தினர் அனைவரையும் வரவேற்றார்.

பெரும்புலவர் இரா.இளங்குமரனார் அவர்கள், 'முன்னைத் தமிழே வாழியவே' என்றதமிழ் வணக்கத்துடன் தன் சிறப்புரையைத் துவக்கி,

'என்றஒருத்தியும் இன்தமிழ்நாடும் பேசும் மொழியும் தாய் தாய் தாயே! என்று மொழிந்த திரு.வி.க.வின் வாக்கினை மெய்ப்பித்தவர் பாண்டித்துரையார் என்று புகழாரம் சூட்டினார்.

பெரும்புலவரை அடுத்து உரை நிகழ்த்திய முனைவர் தமிழண்ணல் அவர்கள், அயர்ச்சியினால் ஆழ்ந்த உறக்கத்தில் தோய்ந்தபோது பாண்டித்துரைத்தேவரவர்கள் கனவில் வந்து, வலியுறுத்தியதாக உரையாற்றினார்.

துறைபோகிய அறிவு மிக்க தமிழ் வள்ளல் என்று பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்கு முனைவர் சி.கதிர்மகாதேவன் புகழாரம் சூட்டினார்.

செம்மொழி ஆய்வு மையப் பொறுப்பாளர் முனைவர் ப.மருதநாயகம் அவர்கள் சங்ககாலம் தொட்டு வளமாக வாழ்ந்துவரும் தமிழின் தனித்தன்மையை எடுத்துரைத்து, தமிழ் ஒரு கவிதை மொழியாக வளர வலுவாக அடித்தளமிட்டார்கள் சங்ககாலச் சான்றோர்கள் என்று வலியுறுத்தி உரையாற்றினார்.

தமிழ்ச் செம்மல் ந.மணிமொழியன் அவர்கள் பேசும் போது, மதுரை மாநகர் திருவிளையாடலுக்குச் சிறப்புப் பெற்றது. அதுபோல மாமன்னர் பாண்டித்துரைத்துரையார் தொடங்கிய மதுரைத் தமிழ்ச்சங்கம் இன்று பீடுநடையிட்டு சிறப்புடன் திகழ்கின்றது என்று புகழாரம் சூட்டினார்.

உலகத் தமிழ்ச்சங்கம் அனைத்தையும் அரவணைத்து ஒருங்கிணைப்பு செய்து தலைமையேற்று நடத்தும் தனிச்சிறப்பு மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கே உரியதாகத் திகழ்கின்றது என்பதனைத் திருமிகு மு.நாகேசுவரன் எடுத்துரைத்த கருத்து அனைவருக்கும் ஏற்புடைய கருத்தாக அமைந்திருந்தது.

வாழ்த்துரை நல்கிய முனைவர் எஸ்.சண்முகையா, பாரிபரமேஸ்வரன், து.சவுந்தரபாண்டியன் ஆகியோர் பொன்.பாண்டித்துரையாரின் தமிழ் மாண்பினையும் தமிழ் மொழியின் வளத்தினையும் போற்றிப் புகழ்ந்துரைத்தனர்.

எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்றவாக்கிற்கு மெய்ப்பிடமாகத் திகழ்ந்த நூற்றாண்டு விழாவிற்கு வருகை புரிந்த அனைவருக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர், திருமிகு செ.மா.நாகராசன் நன்றி தெரிவித்தார்.

---




தமிழ்ச் சங்க சான்றோர் விருது மற்றும் பொற்கிழி பெற்ற ஒன்பது தமிழறிஞர்களுடன் தலைவர் மற்றும் இரு செயலாளர்கள்.

# தமிழ்ச் சங்கச் சான்றோர் விருது விழா

தமிழ் வளம் காப்பதற்காகத் தொடங்கப் பெற்றமதுரைத் தமிழ்ச்சங்கம், நூற்றாண்டு விழா காணும் இக்காலக்கட்டத்தில் தமிழ்த் தொண்டாற்றி வரும் தமிழறிஞர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் ஊக்கப்படுத்த வேண்டும் என்றநோக்கில் நவமணிகளாக விளங்கும் ஒன்பது தமிழவர்க்குத் தமிழ்ச்சங்கச் சான்றோர் விருது வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| பெரும்புலவர் | இரா. இளங்குமரனார் |
| முனைவர் | தமிழண்ணல் |
| முனைவர் | சி.கதிர்மகாதேவன் |
| தமிழ்ச்செம்மல் | ந.மணிமொழியன் |
| திருமிகு | மா.தனுக்கோடி பாண்டியன் |
| முனைவர் | செ.கந்தசாமி |
| திருமிகு | புஷ்பவனம் |
| புலவர் | அ.சாமிஅய்யா |
| திருமிகு | கோச்சடை ஆ.முத்துராமலிங்கம் |

ஆகிய தமிழ் உள்ளங்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தலைவர் மாட்சிமைதங்கிய முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி அவர்கள் பொன்னாடையும், பொற்கிழியும், நூற்றாண்டு விழா நினைவுக்கேடயமும் தமிழ்ச் சான்றோர் விருதுப் பதக்கமும் நல்கிச் சிறப்பித்தார். விருது பெற்றோர் தாங்கள் பேறு பெற்றோம் என்று ஏற்புரை வழங்க, விருது விழா இனிதே நடந்தேறியது.

# நூல்கள் வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம் தோற்றம் பெற்றகாலத்தில் தமிழ்வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்கள் பழைய நூல்களைத் தேர்ந்தெடுத்து பதிப்பித்தலும், புதிய நூல்களைச் சிறப்பெடுத்துப் பதிப்பத்தலும் நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டவர். முன்னோர் சொல் காத்தல் என்பது சான்றோர் வழிவந்த இளவல்களின் தலையாய பணியாகும் என்பதை உணர்ந்தும், தமிழ் வள்ளலின் கனவிற்கு உயிர்கொடுத்தும் தொடர்ந்த தமிழ்ப்பணி ஒன்றேதமிழ்ச்சங்கத்தின் பணி என்றஅளவுகோலுடன் சங்கத்தை நடத்தி வரும் தலைவர், செயலர் உள்ளிட்ட நிர்வாகிகள் நூற்றாண்டு விழாக் காலத்தில் பழைய, புதிய நூல்களை வெளியிட பேரவா கொண்டனர். அதனடிப்படையில் 20.09.08 அன்று காலை தொடக்கவிழாவில் காமாட்சி ஆதீனம் படைத்த **சேதுபதி பிள்ளைத்தமிழ்** என்னும் நூல் வெளியிட ஏ.ஆர் இலட்சுமணன் முதற்படியைப் பெற்றுக் கொண்டார்.

21.09.08 அன்று குளிர்மாலைப் பொழுதில் இரா.இராகவய்யங்கார் எழுதிய **சேதுநாடும் தமிழும்** என்றமறுபதிப்பு நூலை கதர், கிராமத் தொழில் வாரிய இயக்குநர் திருமிகு து.விவேகானந்தன் இ.ஆ.ப. வெளியிட, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இரா.கற்பகக்குமாரவேல் நூல் முதற்படி பெற்றுச் சிறப்பித்தார்.

நூற்றாண்டு விழாவிற்குச் சிகரம் வைத்தாற்போன்று, நூற்றாண்டு விழா மலர் வெளியிடப்பெற்றது. நூற்றாண்டு விழா மலரைத் தமிழக உயர்கல்வித்துறைச் செயலாளர் க.கணேசன் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் முதற்படி பெற்றுச் சிறப்பித்தார்.




நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டின்போது மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழக துணைவேந்தர், மதுரைத்தமிழ்ச் சங்கத் தலைவர் மற்றும் துணைத்தலைவர்.

# நிறைவு விழா சிறப்புரைகள்

மலர் மற்றும் நூல் வெளியீட்டு நிகழ்வாக அமைந்த நிறைவு விழாவிற்கு வருகை புரிந்த தமிழ்ப்பற்றாளர்கள் அனைவரையும் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் முனைவர். க.சின்னப்பா அவர்கள் தமிழ்மொழியின் சார்பாகவும் தமிழ் இனத்தின் சார்பாகவும், தமிழ் மக்கள் சார்பாகவும் வருக வருக என வரவேற்று உரையாற்றினார்.

பொன் மகுடமாம் இந்நிகழ்விற்குச் செந்தமிழ்க்கல்லூரிச் செயலர் இரா.குருசாமி அவர்கள் தலைமையேற்றார். சூழ்நிலை காரணமாகத் தமிழ் படிக்க வரும் மாணவர்கள் கூட பாண்டித்துரைத் தேவரின் அருளாசியினால் கெட்டிக்காரர்களாக உருவாகுவார்கள் என்று குறிப்பிட்ட செயலர் அவர்கள் அரசுத்துறையும் பல்கலைக்கழகங்களும் 'தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கப்புள்ளி வழங்கி அரசுப்பணிகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும்' என்று அன்பான வேண்டுகோளும் விடுத்தார். இவ்வேண்டுகோள் தமிழ்மாணவர்கள் மீது அவர் கொண்டுள்ள தாய்ப்பாசம் போன்ற அன்பினை வெளிக்காட்டுவதாக அமைந்தது.

சிறப்புரையாற்றிய துணைவேந்தர் முனைவர் இரா.கற்பகக்குமாரவேல் அவர்கள், நூற்றாண்டு விழா வரலாற்றில் ஒரு முக்கிய காலகட்டம் என்று குறிப்பிட்டார். இவ்விழா பாராட்டு விழா மட்டுமல்லாமல் ஆக்கப்பூர்வமாகவுடன் எதிர்காலச் சிந்தனையுடனும் சான்றோர்களை அழைத்து தயார் செய்யும் விழா என்றும் போற்றிப் பேசினார்.

தமிழுண்டு தமிழ் மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு!

– பாவேந்தர் பாரதிதாசன்



# மதுரை நான்காம் தமிழ்ச் சங்க

# நூற்றாண்டு விழா

# அழைப்பிதழ்



**நாள்**

20.09.2008 – 21.09.2008

சனிக்கிழமை – ஞாயிற்றுக்கிழமை

**காலம்**

காலை 9.00 மணி

**நிகழிடம்**

தமிழ்நாடு தொழில் வர்த்தகப் பேரவை அரங்கு,

178பி, காமராசர் சாலை,

மதுரை.

தமிழ்ப் பெருந்தகையீர்!

வணக்கம். நிகழும் மங்களகரமான சர்வதாரி ஆண்டு புரட்டாசி மாதம் 4ஆம் நாள் சனிக்கிழமை மற்றும் 5ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (20.09.2008, 21.09.2008) ஆகிய இரண்டு நாட்களும் காலை 9மணி முதல் இரவு 8மணி வரை தமிழ்ச் சான்றோர்களின் கருத்துருவிற்கேற்ப மதுரை நான்காம் தமிழ்ச்சங்க நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. இவ்விழா மதுரை, காமராசர் சாலையில் 178பி எண்ணில் அமைந்துள்ள தமிழ்நாடு தொழில் வர்த்தகப் பேரவையரங்கில் சீரோடும் சிறப்போடும் நடைபெறும். அவ்வமயம் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவண்

தலைவர், செயலாளர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கம்

தலைவர், செயலாளர் மற்றும் கல்விக்குழு உறுப்பினர்கள் செந்தமிழ்க் கல்லூரி

முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள், ஆய்வாளர்கள்

மற்றும்

மாணவ, மாணவியர் செந்தமிழ்க் கல்லூரி

***நிகழ்ச்சி நிரல்***

தொடக்க விழா : 20.09.2008 சனிக்கிழமை

காலை : 8 மணி

செந்தமிழ்க் கல்லூரி மாணவ, மாணவியர் ஊர்வலம்

காலை : 9 மணி

மங்கள இசை :

கலைமாமணி எம்.பி.என். பொன்னுசாமி குழுவினர்

# முதல் அமர்வு

**இறைவணக்கம் :**

சிவத்திரு **யாழ்.பாலசுந்தரம்,** திருவாவடுதுறைஆதீனம்

**திருவிளக்கு ஏற்றுதல் :**

மாட்சிமைதங்கிய மகாராணியார் சமூகத்தினர்

முகவை மகாராணி பிரம்மகிருஷ்ண ராஜேஸ்வரி நாச்சியார்

மாட்சிமைமிகு சிவகங்கை இராணியார் மதுராந்தகி நாச்சியார்

**தலைமை :**

மாட்சிமைதங்கிய முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**

தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

**முன்னிலை :**

திருமிகு **இரா.அழகுமலை,**

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

திருமிகு. **இரா.குருசாமி**

செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**வரவேற்புரை :**

மருத்துவர் **ந.சேதுராமன்,**

தலைவர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**விழாத் தொடக்கவுரை :**

தவத்திரு தமிழ் மாமுனிவர் **குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்**

பொருள் : **"பாண்டித்துறைத் தேவரும் சைவமும்"**

**நூல் வெளியீடு :**

**"சேதுபதி பிள்ளைத்தமிழ்"**

**நூல் வெளியீட்டுச் சிறப்புரை :**

சிவத்திரு **காமாட்சிபுரம் ஆதீனம்,** கோவை

**நூல் முதல்படி பெற்றுச் சிறப்புரை :**

பேராசிரியர் **இ.சுந்தரமூர்த்தி,**

மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை

**விழாச் சிறப்புரை :**

முனைவர் **இரா.செல்வக்கணபதி**

மேனாள் முதல்வர், தருமை ஆதீனக் கல்லூரி, சென்னை

**வாழ்த்துரை :**

முனைவர் **ஐ.சிங்காரம்**

பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

முனைவர் **செ.பாண்டி**

கல்லூரிக் கல்வி இணைஇயக்குநர், மதுரை

முனைவர் **வாசுகிராசா,**

அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை

**சிறப்பு அழைப்பாளர்கள் :**

1. பாளையம்பட்டி திருமிகு **கே.எஸ்.டி.இராசேந்திரன்**
2. தஞ்சை மன்னர் திருமிகு **போன்ஸ்லே**
3. திருமிகு **கி.அய்யாறு வாண்டையார்**
4. திருமிகு **மலையாண்டி** (எ) **அசோக்,** காஞ்சரம்பேட்டை
5. திருமிகு **குப்புசாமி,** நிறுவனர்,

ஆர்.வி.எஸ். கல்வி நிறுவனங்கள், கோவை

**நன்றியுரை :**

திருமிகு **க.முத்தையா பசும்பொன்,**

ஆட்சிக்குழு உறுப்பினர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

## முதல்நாள் இரண்டாம் அமர்வு

மாலை : 3 மணி

**தலைமை :**

மாட்சிமைதங்கிய முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**

தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

*முன்னிலை :*

திருமிகு **இரா. அழகுமலை**

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

திருமிகு **இரா.குருசாமி,**

செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

*வரவேற்புரை :*

மாட்சிமைதங்கிய முகவை **இராணி இலக்குமி நாச்சியார்**

துணைத்தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

பொருள் :

**"பாண்டித்துரைத் தேவரும் - செந்தமிழ் இதழ்ப் பணியும்"**

*சிறப்புரை :*

முனைவர் **அ.மணவாளன்,** சென்னை

முனைவர் **அ.தட்சிணாமூர்த்தி,** தஞ்சை

முனைவர் **இரா.மோகன்**

முனைவர் **மு.இராமசாமி,** தஞ்சை

முனைவர் **கு.ஞானசம்பந்தன்**

முனைவர் **க.பசும்பொன்**

திருமதி **தினகரன் விஜயலெட்சுமி**

திருமிகு **க.க.இராசா,**

உறுப்பினர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை

திருமிகு **சங்கர.சீத்தாராமன்,** துணைத்தலைவர், கம்பன் கழகம், மதுரை

மாலை : 6 மணி முதல் 7 மணி வரை

***கலைப்பண்பாட்டு நடனம் :***

மதுரை சத்குரு சங்கீத சமாச மாணவியர் கலைக்குழு

இரண்டாம் நாள் 21.09.2008 ஞாயிற்றுக்கிழமை

**தமிழ்ச் சான்றோர் விழா**

காலை : 10 மணி

**தலைமை :**

மாட்சிமைதங்கிய முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**

தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

**முன்னிலை :**

திருமிகு **இரா.அழகுமலை,** செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

திருமிகு **இரா.குருசாமி,** செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**வரவேற்புரை :**

திருமிகு **இரா.கண்ணன்,** ஆட்சிக்குழு உறுப்பினர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

**சிறப்புரை :**

பெரும்புலவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **தமிழண்ணல்**

முனைவர் **கதிர்மகாதேவன்**

'தமிழ்ச் செம்மல்' **ந.மணிமொழியன்**

முனைவர் **ப.மருதநாயகம்**

பொறுப்பாளர், செம்மொழி ஆய்வு மையம், சென்னை

திருமிகு **மு.நாகேசுவரன்,** உலக தமிழ்ச் சங்க ஒருங்கிணைப்பு ஆர்வலர், தருமபுரி

**வாழ்த்துரை :**

முனைவர் **எஸ்.சண்முகையா,**

தேர்வாணையர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

திருமிகு **பாரிபரமேஸ்வரன்,**

இயக்குநர், இளைஞர் நலத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

திருமிகு **து.சவுந்தரபாண்டியன்,** ஆய்வாளர், வருமானவரித்துறை

**நன்றியுரை :**

திருமிகு **செ.மா.நாகராசன்,** ஆட்சிக்குழு உறுப்பினர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

மாலை : 3 மணி முதல் 5 மணி வரை

**தமிழ்ச் சங்கச் சான்றோர் விருது வழங்கும் விழா**

**அறிமுகவுரை :**

முனைவர் **க.சின்னப்பா,** முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**விருதுபெறுபவர்கள் :**

பெரும்புலவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **தமிழண்ணல்**

முனைவர் **கதிர்மகாதேவன்**

'தமிழ்ச் செம்மல்' **ந.மணிமொழியன்**

திருமிகு **மா.தனுக்கோடிபாண்டியன்**

மேனாள் செயலாளர், மதுரைத்தமிழ்ச் சங்கம்

முனைவர் **செ.கந்தசாமி,** மேனாள் முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி

திருமிகு **புஷ்பவனம்,** மேனாள் துணைப்பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

திருமிகு **அ.சாமிஅய்யா,** தமிழறிஞர்

கோச்சடை **ஆ.முத்துராமலிங்கம்**

மாலை : 5 மணி

**நூற்றாண்டு விழா மலர் வெளியீடு**

***தலைமை :***

முனைவர் **அ.இராமசாமி,** துணைத்தலைவர், உயர்கல்வித்துறை, சென்னை

***மலர் வெளியீட்டுச் சிறப்புரை :***

திருமிகு **க.கணேசன்** இ.ஆ.ப., செயலாளர், உயர்கல்வித்துறை, சென்னை

***முதற்படி பெற்றுச் சிறப்புரை :***

முனைவர் **ம.இராசேந்திரன்,** துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை

நூல் வெளியீடு : **"சேதுநாடும் தமிழும்"**

***நூல் வெளியீட்டுச் சிறப்புரை :***

திரு **து.விவேகானந்தன்,** இ.ஆ.ப.,

இயக்குநர், கதர், கிராமத்தொழில் வாரியம், சென்னை

***நூல் முதற்படி பெற்றுச் சிறப்புரை :***

முனைவர் **இரா.கற்பககுமாரவேல்,**

துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

***சிறப்புரை :***

முனைவர் **நா.ஆவுடையப்பன்,** இயக்குநர், நூலக ஆணைத்துறை, சென்னை

***நிறைவுச் சிறப்புரை :***

நீதிபதி டாக்டர் **A.R.இலட்சுமணன்,**

முன்னாள் நீதிபதி, உச்ச நீதிமன்றம், புதுதில்லி

தலைவர் இந்திய சட்ட ஆணையம், புதுதில்லி

***நன்றியுரை :***

முனைவர் **க.சின்னப்பா,** முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை



நூற்றாண்டு விழாவின் தொடக்க நிகழ்ச்சியாக நிறுவனர் திருவுருவச் சிலைக்கு தலைவர் மற்றும் துணைத்தலைவர் மாலையணிவித்தல்.



நிறுவனர் திருவுருவச் சிலைக்கு தமிழ்ச்சங்கச் செயலாளர் மாலையணிவித்தல்.



ஊர்வலத்தில் மாணவர்கள் அணிவகுத்து வரும் காட்சி.



மதுரை மாநகர பிரதான சாலைகளில் மாணவியர் அணிவகுத்துச் சென்ற ஊர்வலக் காட்சி.



மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர், செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர் ஆகியோர் ஊர்வலத்தின் முன்னால் நடந்து வந்த காட்சி.



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு உறுப்பினர் திரு.க.க.இராசு முகவை மன்னர் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.



தொடக்க விழா நிகழ்விற்கு தலைமையேற்க வந்திருந்த இந்திய சட்ட ஆணையத் தலைவரும், முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதியுமான திரு.ஏ.ஆர்.இலட்சுமணன் அவர்களை தலைவர் வரவேற்கும் காட்சி.



மதுரைத் தமிழ்ச் சங்க நிர்வாகிகளுக்கு திரு.ஏ.ஆர்.இலட்சுமணன் அவர்கள் வணக்கம் செலுத்துகிறார்.




இறை வணக்கத்தோடு விழா தொடங்குகிறது.



முகவை மகாராணியாரும், சிவகங்கை மகாராணியாரும் மங்கல விளக்கேற்றி விழாவை மகிழ்ச்சியாக தொடங்கி வைக்கிறார்கள்.



மங்கல விளக்கேற்றுவதில் பங்குபெறும் திரு.ஏ.ஆர்.இலட்சுமணன் அவர்கள் மற்றும் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள்.



நீதியரசர் திரு. ஏ.ஆர். இலட்சுமணன் அவர்களுக்கு முகவை மன்னர் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்குகிறார்.




முகவை மகாராணியார், சிவகங்கை மகாராணியாருக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செய்கிறார்.



சிவகங்கை மகாராணியார், முகவை மகாராணியாருக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செய்கிறார்.




நூற்றாண்டு விழா மலரை தமிழக அரசின் உயர்கல்வித்துறைச் செயலாளர் திரு.க.கணேசன் இ.ஆ.ப. அவர்கள் வெளியிட தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் திரு.ம.இராசேந்திரன் அவர்கள் முதற்படியை பெற்றுக் கொள்கிறார்.




முகவை மன்னர் அவர்களும் திருமதி. லட்சுமி நாச்சியார் அவர்களும் உயர்கல்வித்துறை செயலர் திரு.க.கணேசன் இ.ஆ.ப.அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்குகிறார்.



முகவை மன்னர் அவர்கள் கன்னிமரா நூலக ஆணையத் தலைவர் முனைவர் ஆவுடையப்பன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.



செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் அவர்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார்.



முகவை மன்னர் அவர்கள் சிவத்திரு காமாட்சிபுரி ஆதினத்திற்கு நினைவுப் பரிசு வழங்குகிறார்.




உறுப்பினர் திடியன் பெ.சிவராமன் அவர்களின் 'தமிழ் எழுத்துக்களின் மறுமலர்ச்சிகள் 2008' நூலை முகவை மன்னர் அவர்கள் வெளியிட முதற்பிரதியை செயலாளர் அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.



முனைவர் திரு. தமிழண்ணல் அவர்களுக்கு முகவை மன்னர் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.



முகவை மன்னர் அவர்கள் முனைவர் திரு.சி.கதிர்மகாதேவன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.




முகவை மன்னர் அவர்கள் உலகத் தமிழ்ச்சங்க ஒருங்கிணைப்பாளர் திரு.மு.நாகேசுவரன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.




முகவை மன்னர் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக தேர்வாணையர் திரு.சண்முகையா அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.



தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.ம.இராசேந்திரன் அவர்களை கல்லூரிச் செயலாளர், முதல்வர் ஆகியோர் வரவேற்கும் காட்சி.



கல்லூரிச் செயலாளர் அவர்கள் திரு.சுகுமார் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.



முகவை மன்னர் அவர்களும் திருமதி. லட்சுமி நாச்சியார் அவர்களும் உயர்கல்வித்துறை செயலர் திரு.க.கணேசன் இ.ஆ.ப.அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்குகிறார்.



முகவை மன்னர் அவர்கள் கன்னிமரா நூலக ஆணையத் தலைவர் முனைவர் ஆவுடையப்பன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகிறார்.




நூற்றாண்டு விழா மலரை தமிழக அரசின் உயர்கல்வித்துறைச் செயலாளர் திரு.க.கணேசன் இ.ஆ.ப. அவர்கள் வெளியிட தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் திரு.ம.இராசேந்திரன் அவர்கள் முதற்படியை பெற்றுக்




உயர்கல்வித் துறைச் செயலர் திரு.க.கணேசன் இ.ஆ.ப. அவர்கள் கருத்துரை வழங்குவதை மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர் கவனம் செலுத்துகிறார்.




தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் கருத்துரை வழங்குகிறார். உடன் கல்லூரிச் செயலர் மற்றும் தமிழ்ச் சங்கச் செயலர் அவர்கள்.



முகவை இராணியார் அவர்களும் கல்லூரிச் செயலர் அவர்களும் முகவை மன்னரோடு நூற்றாண்டு விழா மலரைப் பார்வையிடுகிறார்கள்.



'சேதுநாடுந் தமிழும்' நூல் வெளியிடப்படுகிறது.



மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் – 1904



மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் – 2001


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : **0452-6575615**

RNI Regd. No.: 5508/56 November 2008

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் கதிர் மகாதேவன்

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை– 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1.